**05-07-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : நன்னீர் அரசியல்**

**தொடக்கவுரையாடல் : மு. மயூரன்**

*உலகில் நன்னீருக்கான நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது என்பது இன்று பரவலாக உணரப்படுகிறது. எதிர்கால சந்ததிக்கு நன்னீர் உரிய முறையில் கிடைக்காமல் போகக்கூடிய அபாயம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.*

*நன்னீர் எனப்படும் விலைமதிப்பற்ற வளத்தைக் காக்கவேண்டும் என்றும் உரிய முறையில் முகாமை செய்ய வேண்டும் என்றும் எல்லாத்தரப்பினராலும் கருத்தளவில் உணரப்படுகிறது.*

*எல்லோரும் நன்னீர் வளத்தைக்காக்க வேண்டும் என்று கூறினாலும் அவ்வளத்தைக் காப்பதற்கு அவர்கள் முன்வைக்கும் திட்டங்கள் வேறுபாடானவையாகவும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகவும் உள்ளன. ஏகாதிபத்திய, முதலாளித்துவ சக்திகளுக்குச் சார்பானவர்கள், நன்னீர் வளத்தைத் தனியார் மயப்படுத்தி, நன்னீர் முகாமைத்துவத்தைத் தனியாரின் கைகளில் ஒப்படைப்பதே எதிர்காலத்திற்காக நன்னீர் வளத்தைக் காப்பதற்கான ஒரே வழி என்று வாதிடுகிறார்கள்.*

*சாதாரண மக்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும், அரசுக்கும் சரிவர நன்னீர் வளத்தை முகாமை செய்யத்தெரியாதென்றும் இதனாலேயே நன்னீர் நெருக்கடி ஏற்படுகிறது என்றும் இவர்கள் மறுபடி மறுபடி பரப்புரை செய்கிறார்கள்.*

*இத்தரப்பினரில் IMF, WTO போன்ற பெரு முதலாளிகளினதும் ஏகாதிபத்தியங்களினதும் நலன் காக்கும் அமைப்புக்கள் முன்னணியில் இருக்கின்றன.*

*மக்களும் பொது அமைப்புக்களும் அரச அமைப்புக்களும் நன்னீரைப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்தத் தவறுகின்றனர் என்பது உண்மைதான் என்றபோதிலும், நன்னீர் வளத்தைச் சூறையாடும் பகாசுர வணிக நிறுவனங்களால் விரயம் செய்யப்படும் நன்னீரின் அளவுக்கு முன்னால் எதுவுமே ஒப்பிடப்பட முடியாததாகும்.*

*நன்னீர் வளத்தைத் தனியார் மயப்படுத்த வேண்டும் என்ற பரப்புரைக்குப் பின்னால் மூடி மறைக்கப்படும் உண்மையாகவும் நன்னீர் அரசியலின் அடிப்படைப் பிரச்சினையாகும் இந்தத் தனியார் வணிக நிறுவங்களின் நீர்வளச் சூறையாடலே அமைகிறது.*

*உலகில் "நீர்ப்பிரபுக்கள்" என்று அழைக்கப்படும் பாரிய பத்து நிறுவனங்களின் உரிமையாளர்கள் நன்னீர் என்கிற வளத்தினை வணிகத்துக்குப்பயன்படுத்தி மிகப்பெரிய அளவில் இலாபமீட்டி வருகிறார்கள். இவர்களைத்தவிரவும் ஏராளமான நிறுவனங்கள் நன்னீர் வளத்தினின்று இலாபம் சம்பாதிக்கிறார்கள்.*

*விற்று இலாபம் சம்பாதிகக்கூடிய "விற்பனைச் சரக்காக" நன்னீர் வளத்தை மாற்றுவதே இம்முதலாளிய சக்திகளின் அடிப்படை அரசியல் நோக்கமாக அமைகிறது. இதன்காரணமாகவே நன்னீரை மனித உரிமையாக அங்கீகர்ப்பதற்கு இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.*

*மூன்றாமுலக நாடுகளில் பாரிய தொழிற்சாலைகளை அமைத்து இலாபமீட்டும் நிறுவனங்கள் அத்தொழிற்சாலைகள் பயன்படுத்தும் நீருக்காக மிகக்குறைந்தளவு நீர்க்கட்டணத்தை மட்டுமே செலுத்துகின்றன. அத்தொழிற்சாலைகளால், மறுபடி பயன்படுத்த முடியாதளவுக்கு மாசுபடுத்தப்படும், சூறையாடப்படும் நீர்வளத்துக்கும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்குமான எந்தவொரு நட்ட ஈடும் மக்களுக்கு அந்நிறுவனங்களால் வழங்கப்படுவதில்லை.*

**மிகுதி அடுத்த பக்கம்**



பாப்லோ நெருடா

*பாப்லோ நெருடா, (Pablo Neruda, ஜூலை 12, 1904 - செப்டம்பர் 23, 1973) என்ற புனைப்பெயர் கொண்ட ரிக்கார்டோ இலீசர் நெப்டாலி ரீயஸ் பொசால்தோ ( Ricardo Eliecer Neftalí Reyes Basualto), சிலி நாட்டில் பிறந்தவர்.*

*இவர் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். கவிஞராகவும், சமூக உணர்வு கொண்ட போராளியாகவும், மார்க்சிய தத்துவங்களில் ஈடுபாடு கொண்டவராகவும் திகழ்ந்தவர்.*

*1964ஆம் ஆண்டு ப்ரெஞ்சு தத்துவவாதியான ழான் பால் சார்த்தர் நோபல் பரிசு வேண்டாம் என்று சொல்லி மறுத்ததற்கு ஒரு காரணம், அந்த ஆண்டு பாப்லோ நெருடாவிற்கு பரிசு கொடுத்திருக்க வேண்டும் என்பது. 1971 ஆம் ஆண்டு பாப்லோ நெருடாவுக்கு நோபெல் பரிசு வழங்கப்பட்டது.*

*"இருபதாம் நூற்றாண்டில் உலக மொழிகள் எல்லாம் கண்ட மாபெரும் கவிஞர் இவரே" என்று லத்தீன் அமெரிக்க எழுத்தாளராகிய கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ், நெருடாவினைப் புகழ்கின்றார்.*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

**நன்னீர் அரசியல்**
**முன்பக்கத் தொடர்ச்சி..**

நீர்வளத்தைக் காப்பதென்பது சாதாரண மக்களின் தவறுகளைத் திருத்துவதனூடாக மட்டுமே எட்டப்பட முடியும் என்பதுபோலவும் அது மக்களுடைய பணி என்பது போலவும் பாடப்புத்தகங்களிலிருந்து ஊடகங்கள் வரை பரப்புரைக்கப்படுகிறது. ஆனால் அது உண்மையான பிரச்சினையை மூடிமறைப்பதாகவே அமைகிறது.

நீர்வளத்தைக் காப்பதென்பது நீர்வளம் தனியார் மயமாவதை எதிர்த்துப் போராடுவதனூடாக மட்டுமே எட்டப்பட முடியும் என்பதே யதார்த்தமாகவுள்ளது. நீர்வளத்தைக் கொள்ளையிடும் பெருவணிக நிறுவனங்களுக்கு எதிராகவும் அவற்றின் கைப்பாவையாக இருக்கும் IMF, WTO, உலகவங்கி போன்றவற்றையும், இவற்றுக்கு வசதி செய்துகொடுக்கும் அரசுகளையும் தீவிரமாக எதிர்த்துப் போராடித் தோற்கடிப்பதனூடாக மட்டுமே நீர்வளத்தை எமது எதிர்கால சந்ததிகளுக்காகக் காத்து நிற்க முடியும்.

**தண்ணீர் அரசியல்: சில குறிப்புக்கள**

உலக சனத்தொகையில் ஐந்தில் ஒருவருக்கு குடிப்பதற்கான நீர் கிடைப்பதில்லை.

ஆண்டுதோறும் நான்கு மில்லியன் மக்கள் நீர் தொடர்பான நோய்களால் சாகிறார்கள்.
98% நீர் தொடர்பிலான மரணங்கள் வளர்ந்துவரும் நாடுகளிலேயே நிகழ்கின்றன.

வளர்ந்துவரும் நாடுகளில் 80% நோய்கள் நீரினாலேயே ஏற்படுகின்றன.

ஆண்டுதோறும் 1.8 மில்லியன் குழந்தைகள் வயிற்றுப்போக்கினால் இறக்கிறார்கள்.

எட்டு செக்கனுக்கு ஒரு குழந்தை நீர் தொடர்பான நோயினால் மரணிக்கிறது.

ஆபிரிக்கப்பெண்கள் வாரமொன்று 16 மணித்தியாலங்களை நீரைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டும் செலவழிக்கின்றார்கள்.

ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ள பெண்கள் நீரைப் பெறுவதற்காக தினமும்
சராசரியாக 3.7 மைல்கள் நடக்கிறார்கள்.

உலகில் இருக்கின்ற மொத்த நீர்வளத்தில் 1% மட்டுமே மனிதப் பாவனைக்கு உகந்த நன்னீரைக் கொண்டுள்ளது.

ஒரு பவுண்டு கோப்பியை உற்பத்தி செய்ய 11,000 லீட்டர் தண்ணீர் செலவழிக்கப்படுகிறது.

போத்தலில் அடைத்த நீரை விற்பனை செய்வதால் மட்டும் ஆண்டொன்றுக்கு 150
பில்லியன் அமெரிக்க டாலர்கள் இலாபம் கிடைக்கிறது.

உலகத்தில் உள்ள 85% போத்தலில் அடைத்த நீர் வியாபாரத்தை கொகோ கோலா, பெப்சி மற்றும் நெஸ்லே ஆகிய மூன்று நிறுவனங்களும் சொந்தமாக
கொண்டிருக்கின்றன.

போத்தலில் அடைத்த நீர் குழாய் நீரிலிருந்தே பெறப்பட்டு போத்தலில் அடைத்து
விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் பனிப்பாளங்களில் (glacier) இருந்து பெறப்பட்டதாக விளம்பரம் செய்யப்படுகிறது. இந்த மூன்று நிறுவனங்களும் பொதுக் குழாய்களில் இருந்து கிடைக்கும் நீர் சுத்தமானதல்ல என்ற பொய்யைப் பரப்ப ஆண்டுதோறும் பாரிய தொகையைச் செலவு செய்வதோடு, அத்தோடு தொடர்புடைய சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களை விலைக்கு வாங்குவதன் மூலம் போத்தலில் அடைத்த நீரைப் பருகும்படி மக்களை ஊக்குவிக்கிறார்கள்.

போத்தலில் அடைத்த நீர் வியாபாரமானது ஆகக்குறைந்தது 30% இலாபத்தைத்
தருகிறது. இதன் உற்பத்திச் செலவில் 90% பொதியிடல், கொண்டு செல்லல்,
விநியோகம், விளம்பரம் என்பவற்றிற்கே செலவாகிறது. ஒரு கலன் போத்தல்
தண்ணீரானது அதேயளவு குழாய்நீரை விட 10,000 மடங்கு விலைக்கு விற்கப்படுகிறது.

ஆண்டுதோறும் இந்தப் போத்தல்களுக்காக 900,000 தொன் பிளாஸ்டிக் உற்பத்தி
செய்யப்படுகிறது. இதனால் 2.5 மில்லியன் தொன் அளவிலான காபனீரொக்சைட்
வெளியிடப்படுகிறது.

நீர் வியாபாரம் ஆண்டுதோறும் 500 பில்லியன் இலாபம் தருகின்ற துறையாகின்றது.

எண்ணெய், மின்சாரத்திற்கு அடுத்தபடியான அதிக இலாபம் உழைக்கும் வியாபாரத்துறையாக நீர் மாறியிருக்கிறது.

வளர்ந்துவரும் நாடுகளில் 25% க்கும் மேலான மக்கள் தங்கள் மாதாந்த
அத்தியாவசியப் பொருட்களுக்கான செலவில் நான்கில் ஒன்றை நீரைப் பெறுவதற்காக மட்டும் செலவழிக்கிறார்கள்.

வளர்ந்துவரும் நாட்டிலுள்ள குழந்தையொன்றுக்கு ஆண்டொன்றுக்கு தேவையான நீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க ஒரு அமெரிக்க டாலர் போதுமானது.
இரண்டு பிரான்ஸ் நாட்டு பல்தேசியக் கம்பெனிகள் (Vivendi, Suez)
உலகளாவிய தண்ணீர் விநியோக வியாபாரத்தில் (போத்தல் அடைத்த நீர் தவிர்த்து) 70% க்கு உரிமை கொண்டாடுகின்றன.

அண்மையில் மலேசியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று 300 மில்லிலீட்டர்
தண்ணீரானது கோப்பையில் விற்கப்படும்போது அது 83,233% இலாபம்
சம்பாதிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கிறது.

**சமூக மாற்றத்திற்கான பாதையில் பிரக்ஞையின் முக்கியத்துவம்.**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )**

கலந்துரையாடலுக்கான அடிப்படைகள்

1. மனிதர்களின் சதாரண வாழ்நிலை
2. பிரக்ஞையின்மையின் பாதிப்பும் அதன் விளைவுகளும்
3. பிரக்ஞையின்மையிலிருந்து பிரக்ஞையை நோக்கி...
4. பிரக்ஞையாக வாழ்தல்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
CC BY NC SA